සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් හා
සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு

| | | |
|---|---|---|
| මගේ අංකය DDD/HO/07/SD/05/01-sk | ඔබේ අංකය | දිනය 2018/03/21 |
| எனது இல ................................ | உமது இல ................................ | திகதி ................................ |
| My No | Your No | Date |

சகல மாவட்ட செயலாளர்/மாவட்ட மேலதிக பணிப்பாளர்
தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்.

**<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கியப் தேசியப் போட்டிகள் - 2018</u>**

அறிமுகம்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களில் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு திறமைகளையுடைய சிறார்களின் இலக்கிய மற்றும் அழகியல் ரீதியான திறமைகளை மெருகூட்டுவதற்கு 2018ம் ஆண்டிலும் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக இலக்கிய மற்றும் கலாச்சார போட்டிகளை (தமிழ்/சிங்களம்) வங்கி வலயம், பிரதேச செயலகப் பிரிவு , மாவட்ட மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திலிருந்தும் 03 வயதுத் தொகுதிகளினூடாக நடாத்தத் தீர்மானித்துள்ளது. இவ்வாண்டிலும் புதுவகையான விதத்தில் சிறார்களின் எதிர்காலத்தினை பாதுகாத்து ஒருவருக்கொருவர் மதிப்பளிக்கும் உணர்வுபூர்வமான சிறுவர் சமூகம் ஒன்றுக்காக உள்ளங்களை உருவாக்கும் நோக்கத்துடன் படைப்பாக்கமுள்ள சிறுவர் சமூகம் ஒன்றினை உருவாக்க இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

02. 2004ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டு வரை இத் தேசிய போட்டிகளை வெற்றிகரமாக செயற்படுத்தும் பொருட்டு தாங்களும் தங்களது பணியாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். அதே போன்று சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் செயற்படுத்தப்படும் சகல வேலைத்திட்டங்களினதும் முக்கிய குறிக்கோளானது மக்களிடம் எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் உள்ள பிரிவின் ஒன்றாக சிறுவர் கழகங்களில் இணைத்துள்ள சிறுவர்களைக் குறிப்பிட முடியும் என்பதுடன் போட்டிகளுக்கு மேலதிகமாக சிறுவர் கழக சிறுவர்களை சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டும் இணைத்துக்கொள்வது முக்கியமானதாகும்.

03. இங்கு கிராமிய மக்களின் வாழ்க்கையினை உயர்ந்த விதத்தில் நடாத்திச் செல்வதற்கு முன்னுரிமையினை வழங்கி ஆத்மீக அபிவிருத்தியினூடாக பொருளாதார அபிவிருத்தியினை வெற்றி கொள்வதற்கு **<u>முக்கிய தடையாகவுள்ள போதைப்பொருள் மற்றும் புகைத்தலுக்கு எதிரான கருத்தொன்றினை கட்டியெழுப்புதல் போதை மற்றும் புகைத்தல் பாவனையானது மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனைத் தலைப்புக்களாகக் கொண்ட செய்திகளையுடைய பதாதைகளை</u>** வங்கிச் சங்கங்களிலும், பிரதேச, மற்றும் மாவட்டப்

போட்டிகள் நடைபெறும் இடங்களில் காட்சிப்படுத்தல் வேண்டும். இந்த பதாதைகளுக்கான மாதிரிகள் 04, இணைப்பு இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிகள் 04 ஐயும் அச்சிட்டு காட்சிப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும். ஒரு பதாதையானது 06 அடி நீளத்தினையும் 03 அடி அகலத்தினையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு பதாதையின் பொருட்டு செலவிடக் கூடிய உயர்ந்த பட்ச தொகையானது 1000/= ஆகும். சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு ஒரு புதிய பிரச்சாரத்தினை வழங்குவதற்காக வங்கிச்சங்கம் ஒன்றில் ஒரு பதாதையினாவது காட்சிப்படுத்தல் வேண்டும்.

04. உத்தேச வேலைத்திட்டங்களின் பொருட்டு திணைக்கள நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக தேவையான பிரகாரம் 2016/06 , 2017/04, சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கேற்ப சமூக அபிவிருத்தி மன்றங்களின் நிதியங்களையும் DSD/HO/09/CBO/கொடி என்ற இலக்கமும் 2018-02-19ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சமுதாய அடிப்படை அமைப்பு கொடி நிதியங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் அதற்கமைய வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்துகொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

05. போட்டிகளை நடாத்துவது தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்படுகிறது.

- இணைப்பு இலக்கம் 01 - பொதுவான போட்டி நிபந்தனைகள்
- இணைப்பு இலக்கம் 02 - போட்டிகளின் விபரம்
- இணைப்பு இலக்கம் 03 - சிங்கள மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 04 - தமிழ் மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 05 - கால வரையறை / செயற்படுத்தும் பொறுப்பும் அங்கீகரித்தலும்
- இணைப்பு இலக்கம் 06 - சிறுவர் கதைகளின் புள்ளிகளைப் பதிதல் (வலய மட்டத்திலிருந்தே )
- இணைப்பு இலக்கம் 07 - பதாதைக்கான வாக்கியத் தொடர்கள்

06. கடந்த வருடத்தினைப் போன்று பிரதேச மற்றும் மாவட்ட மட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மாதிரிகள் இரண்டினை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

07. இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - த.அ.கொ.பொருட்டு
2. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், - த.உ.ந.பொருட்டு
3. பணிப்பாளர் (சமுதாய அடிப்படை) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.உ.ந.பொருட்டு
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.உ.ந.பொருட்டு
5. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.உ.ந.பொருட்டு
6. சகல முகாமைத்துவப் பணிப்பாளர்கள்/ தலைமையக முகாமையாளர்கள் - த.உ.ந.பொருட்டு
7. சகல வங்கி வலய முகாமையாளர்கள் - த.உ.ந.பொருட்டு

TRANSLATED BY - M.M.M.JAHAR( Translator)